Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# கட்டடக் கலையில் பழந்தமிழர் நுட்பங்கள்

**முனைவர். க. ஜானகி**
**உதவிப் பேராசிரியர், தமிழ் வளர்ச்சி மையம்,**
**அண்ணா பல்கலைக்கழகம்,**
**சென்னை-25 . janutamil1507@gmail.com**

**67**

**ஆய்வுச் சுருக்கம்**

வாழ்க்கைக்கு மிகப் பயன்தரும் கலையாக இருப்பது கட்டடக் கலையாகும். நாகரிகதின் கருவாக கட்டடக் கலை விளக்குகிறது. தமிழக வரலாற்றுக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப ஐந்திணைகளாகப் பிரிக்கப்பட்ட நிலப்பகுதிகளின் உள்ள குடியிருப்புகள் இக்கட்டடக்கலையின் சிறப்புகளை விளக்குகின்றன. இக்கலையின் சிறப்பை, நகர அமைப்பு, தனிமனிதக் குடியிருப்பு, அரசர்களின் குடியிருப்பாகிய அரண்மனை, நாட்டுப் பாதுகாப்பிற்கான அரண்கள், வீரர்களுக்குரிய படைக் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும் படைக்கொட்டில்கள் வாயிலாக உணரலாம். மேற்கூறிய கருத்துகளை விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்** : நகர அமைப்பு, குடியிருப்பு, படைக்கொட்டில்கள்

**முன்னுரை**

மனிதனது வாழ்வியலுடன் ஒட்டி வளர்ந்த தொன்மையான கவின் கலையாகக் 'கட்டடக் கலை' போற்றப்படுகின்றது. உலகில் அறிவியல் ஆராய்ச்சி வளர்ந்து வருகிறது. கலைகள் பற்றிய வரலாற்றையும் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அழகு அனுபவ வெளிப்பாடு கவின்கலை ஆகும். கவின் கலைகளுள் ஓவியம், சிற்பம், கட்டடம், நடனம், நாடகம் ஆகியவை காட்சிக் கலைகள் என்ற பாகுபாட்டில் உள்ளன. இத்தகைய கலைகளுள் கட்டடக் கலை உலகியற் பயன்மிக்கது. நாட்டு வரலாற்றுக்கும் நாகரிகத்திற்கும் பெரிதும் துணைநிற்கக் கூடிய கலையாக உள்ளது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்க முற்படுகிறது.

**கட்டடக் கலை நுண் கூறுகளும் இலக்கியத் தொழில்நுட்பங்களும்**

தமிழில் 'கட்டடம்' என்னும் சொல், 'கட்டுமான வடிவம்' என்ற பொருள் தரும். கட்டு, அடம் என்ற இரு சொற்களும், கட்டுதற்குரிய அடுக்கு அடுக்கான வடிவம் என்பதைக் குறிக்கின்றது. 'கட்டிடம்' எனும் சொல், கட்டடத்திற்குரிய இடத்தை உணர்த்துகிறது. கட்டடக் கலைக்கு மூன்று கூறுபாடுகள் அவசியமாகின்றன. 1. எதற்காக ஒரு கட்டடம் கட்டப்படுகிறதோ அதற்கான சமூகத் தேவைகளை அது நிறைவு செய்ய வேண்டும். 2. கட்டடத்திற்குப் பயன்படும் பொருள்கள் கட்டமைப்பு ஆகியவை உறுதியாகவும், பொருத்தமாகவும், நீடித்து நிற்பவையாகவும் இருத்தல் வேண்டும். 3. கட்டடம் பார்வைக்க அழகு, அனுபவம் ஆகியவற்றால் இன்பம் தரக்கூடியதாகவும் அமைதல் வேண்டும் என்று அறிஞர்கள் பொதுவாகக் கூறுகிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கட்டடக் கலையின் தொழில்நுட்பத்தையும் சிறப்பினையும் நன்கு புரிந்து கொள்ளுவதற்கு முதலில் அடிப்படையான ஊரமைப்பு, நகர அமைப்பு தெரிந்து

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கொள்வது அவசியம். சங்க காலத்தில் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், அரண்மனைகளும், கோட்டை கொத்தளங்களும், இருந்தள்ளன என்பதை சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை கூறுகின்றன. ஆனால் இன்றைக்கு அவற்றின் இடிபாடுகள் கூடக் கிடைக்கவில்லை. பல்லவர், சோழர், பாண்டியர் முதலியோர் கட்டிய ஆலயங்கள் காணக்கிடைக்கின்றன. அவர்கள் வாழ்ந்த அரண்மனைகள், பாதுகாப்பு வழங்கிய கோட்டை கொத்தளங்கள் ஒன்று கூட இன்று இருந்த இடம் தெரியவில்லை.

**ஐந்திணை குடியிருப்புகள்**

பண்டைய நாளில் ஆற்றங்கரையோரத்தில் வாழ்ந்த மனிதன் மருதநில நாகரிக காலத்தில் தனக்கென வீடு அமைத்து வாழத் தொடங்கினான். முதல் நிலையில் இவ்வீடுகளின் அமைப்பு அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ற வகையில் அமைந்தன. இவை நாளடைவில் ஒவ்வொரு குடும்பத்திற்கு ஏற்ற வகையிலும் ஊராரின் பிற தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் கட்டடங்களாக உருவெடுத்தன.

சங்க இலக்கியப் பாடல்களினின்றும் பழந்தமிழர் பல்வேறு விதமான கட்டடங்களை அமைத்து வாழ்ந்தனர் என்பதையும் அவை சிறந்த கலைத்திறனோடு தேவைக்கு ஏற்ற வகையில் வசதிகள் பெற்று அமைந்திருந்தன என்பதை அறியலாம். வைக்கோல் முதலிய சிறுபுல்லால் வேயப்பட்ட சிறுகுடில் முதலாக, அண்ணாந்து நோக்க இயலாதபடி உயர்ந்து, தோன்றும் எழுநிலை மாடம் ஈறாகப் பலதிறப்பட்ட கட்டடங்களையும் திறம்பட அமைக்கும் கட்டடத் தொழிலில் சங்க காலத் தமிழ் மக்கள் சிறந்து விளங்கினர்.

**முல்லைநிலக் குடியிருப்பு**

காடும் காடு சார்ந்த நிலமும் முல்லைத் திணையாகும். அப்பகுதிகளில் வாழும் மக்கள், காட்டு விலங்குகளுக்கு அஞ்சி மரங்களில் பரண்கள் கட்டி வாழத் தொடங்கினர். பிறகு, அடர்ந்த காட்டுப் பகுதிகளில் கிடைக்கும் மரக்கிளைகளையோ மூங்கிலையோ நட்டும் வலுவான மரக் கம்புகளாலான தட்டயைக் குடிசைக்கு வாசலாக அமைத்துக் கொண்டனர். கூரையுடன் கூடிய குடிசையை அமைத்துக் கொண்டு வாழ்க்கையைத் தொடங்கிய அவர்கள் தம் குடிசைக்கு முன்புள்ள முற்றத்தில் தாம் வளர்க்கும் ஆடு மாடுகளுக்கும் கொட்டகை கட்டி அவை தங்க வழி செய்தனர். பின்னர் செங்கல் சுவரெழுப்பிக் கூரை அமைத்து, கட்டடம் என்ற ஒரு வகை அமைப்பை உண்டாக்கிக் கொண்டனர்.

“இடுமுள்வேலி முடக்கால் பந்தர்
புதுக்கலத்து அன்ன செவ்வாய் சிற்றில்” (அகம், பா.394)

என்ற அகநானூறு பாடல் வழி அறியலாம்.

**குறிஞ்சிநிலக் குடியிருப்பு**

மலையும் மலை சார்ந்த நிலப்பகுதியும் குறிஞ்சித் திணையாகும். குறிஞ்சி வாழ் மக்கள் விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்தவர்கள். தொடக்கக் காலத்தில் குகைவாழ் மக்களாக இருந்தவர்கள். தினை, வரகு முதலிய பயிர்களைப் பயிரிட்ட பொழுது தினைப்புனக் காவலுக்குப் பரண் (நான்கு குச்சிகளைக் கொண்டு உயரமாகக் கட்டப்படும் இடம்) கட்டுவது போலத் தம் குடிசைகளையும் பரண் அமைப்பில் கட்டிக் கொண்டனர். அடுத்தகட்ட வளர்ச்சியாக

மலைப்பாங்கான பகுதிகளில் கூம்புடன் கூடிய வட்டத் தரையமைப்பில் குடிசை கட்டி வாழலாயினர். தம் வாழும் குடிசைக்காகப் பாறைக் கற்களையும் மூங்கில் கம்புகளையும் தினைத்தாள். வரகுத்தாள்களையும் கூரைவேயப் பயன்படுத்திக் கொண்டனர்.

"குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுவினிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும்" (புறம், பா. 128) என்ற பாடல் வழி அறியலாம்.

**மருதநிலக் குடியிருப்பு**

வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதியும் மருதத்திணையாகும். நெல், கரும்பு முதலியவற்றைப் பயிர் செய்யும் உழவர்கள் வாழும் மருத நிலத்தில் நீர்வளம் மிகுதியாகக் காணப்படும். களி மண்ணல் சுவர் எழுப்பித் தென்னை ஓலைகளால் கூரை வேய்ந்து வாழத் தொடங்கினர். பின்னர் செங்கல்லால் வீடு கட்டியும், கம்புகளைக் கொண்டும் புல், வைக்கோல் ஆகியவற்றைக் கொண்டும் கூரைஅமைத்தும் வாழலாயினர். வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் வகையில் தூண்கள், முற்றம், தாழ்வாரம் முதலிய உட்பிரிவுகளும் கட்டப்பட்டன. தானியங்களைச் சேமித்து வைக்கக் குதிர்னளைக் கட்டினர். “தெற்றிப் பாவை திணி மணல் அயரும்" (புறம், பா.283) என்ற புறநானூறு பாடல் வழி அறியலாம்.

**நெய்தல் நிலக் குடியிருப்பு**

கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதியும் நெய்தல் திணையாகும். மீன் பிடித்தும், மீன் வற்றல் ( கருவாடு) விற்றல் வாழ்க்கையை நடத்திய மக்களைப் பரதவர்கள் என்பர். பணை அல்லது தென்னை மர வாரைகளை நாட்டுப் படைமடலாலோ தென்னங்கீற்றாலோ கூரை போட்டு, குட்டையான குடிசைகளில் வாழ்க்கையை நடத்தினர். பின்னர், வசதியான வீடுகளைக் கட்டிக் கொள்ள முயன்றுள்ளனர்.

**பாலைநிலைக் குடியிருப்பு**

பசுமையே தலைகாட்டாத வெம்மையான மணல் சார்ந்த இடம் பாலைத்திணையாகும். வறண்ட நிலத்தில் நிலையான குடியிருப்புகளில் வாழ விரும்பவில்லை. வழிப்பறி செய்து வாழ்க்கையை நடத்தும் அவர்கள் பெரும்பாலும் கூடாரம் அமைத்துக் கொண்டு, பல இடங்களுக்குக் குடிபெயர்ந்த வாழ்ந்தனர்.

**நகர அமைப்பு**

ஓர் ஊரோ நகரமோ அமைய வேண்டுமெனின், அதற்கேற்பப் பல வீடுகளோ கட்டடங்களோ இருத்தல் வேண்டும். வெட்ட வெளியாக இருக்கும் மைதானமோ, புதரும் காடுமாக மண்டிக் கிடக்கும் இடமோ, சமப்படுத்தப்பட்டுத் திருத்தஞ் செய்த நிலையில் பல வீடுகளோ, கட்டடங்களோ கட்டப்பட்டால், ஊராகவோ நகரமாகவோ ஆகிவிடுவதை இன்றும் காணலாம். ஊர்களைப் பாகுபடுத்தும் பொழுது நகரம், பட்டனம் சிற்றூர், படைவீடு (பாசறை) முதலிய பத்துவகைப் பெயர்கள் கூறுவர்.

**சிற்றில்**‘சிற்றில்’ என்பதற்கு சிறுகுடில், சிறுவீடு, சிறுமியர் கட்டி விளையாடும் மணல்வீடு, சிற்றில் பருவம் எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. சிறுவடிவமைப்பை யுடைய வீடுகளைச் சிற்றில்

என இலக்கியங்கள் கூறுகின்றன. சிறுமிகள் மணலில் கட்டி விளையாடும் சிறுமணல் வீடும் என்று அழைக்கப்படுகிறது. இதனை,

“சிற்றில் நல் தூண்..” (புறம்.56:1)

“வரிபுனை பரி சிறந்து ஓடி” (நற்.123:8)

ஏன்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய வீடுகள் தூண்களுடன் கூடிய அமைப்புடன் இருந் துள்ளன. வளைந்த கால்களைத் தூண்களாகக் கொண்டு கட்டப்பட்டிருந்தன.

**பேரில்**

பெரிய அளவில் கட்டமைக்கப்பட்டிருந்த வீடு களைப் பேரில் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. குடியிருப்பதற்குரிய வீட்டின் உறுப்புகள் குலைந்து செல்களால் சிதைக்கப்பட்டிருந்தாலும் ஒழுகாத நிலையில் பெரிய அளவிலான வீடுகள் இருந்துள்ளன. இதனை,

“அந்தோ! எந்தை அடையாப் பேரில்” (புறம்.261:1)

**பெருநகர் – அமைப்பு**

நடுவே பாணர் சேரிகள் அமைந்திருந்தன. மதுரை நகரைச் சுற்றிக்கிடந்த அகழி பாதுகாப்பிற்காகத் தோண்டப்பட்டது. அந்தப் பேரகழியை மதுரைக் காஞ்சி,

மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு (மதுரைக் காஞ்சி, பா.அடி. 350-355)

என வருணித்துள்ளது. மதுரை நகர வாயிலைக் கடந்தால், நகர்க்குள் மண்டபம், கூடம், தாய்க்கட்டு, அடுக்களை முதலியவற்றைக் கொண்ட பெரிய வீடுகள் யாவும் சிற்பவிதிப்படி கட்டப்பட்டு, உயரமாய் உள்ளன. இத்தகைய மாளிகை போன்ற பேரில்லங்களை வரிசையாக இருபுறமும் கொண்ட தெருக்கள் விசாலமாக உள்ளன; ஆறு கிடந்தாற் போன்ற அகன்ற நெடுந்தெருக்களும், பல பண்டங்கள் பெருமளவில் விற்கும் கடைத் தெருக்களும் மதுரைக்குப் பெருமை சேர்த்தன. இவ்வாறு மதுரையில் கட்டடக் கலை எந்த அளவிற்குத் தரம் உயர்ந்து நின்றது என்பதை அறியலாம். மேலும், பரிபாடல், பட்டினப்பாலையிலும் நகர் அமைப்புத் தொடர்பான செய்திகள் காணக்கிடக்கின்றன.

**சங்க கால வீட்டமைப்பு**

சிறு வீடாயினும் பெரிய மாளிகையாயினும் கட்டடக் கலை அடிப்படையில் வீடு கட்டும் மனையிடத்தை வரையறை செய்து கொள்ள வேண்டும். அடுத்து, வீடு பறித்தல் (அடிப்படை - அத்திவாரம் - அமைக்கப் பள்ளம் தோண்டுதல்), கல்லும் சுண்ணாம்பும் கலந்து அழுத்தமாக அடிப்படை போடுதல், சுவர் அமைத்தல், முதல் வாயில் (முகப்பு நிலை) வைத்தல், காலதர் (ஜன்னல்) அமைத்தல், விட்டம் அமைத்தல், மேற்கூரையைத் தேர்ந்து அமைத்தல், தளவரிசை அமைத்தல், சுவர்களுக்குச் சுண்ணாம்புக் கலவை பூசுதல், வெள்ளையடித்தல், தச்சுக் கழித்தல் (கண்ணேறு படாதிருக்க ஆவன செய்தல்), புதுமனை புகுதல் முதலிய பலவும் கட்டடக் கலையுடன் தொடர்பு

கொண்டவையாகும். இவற்றையெல்லாம் முன்னோர்கள் அனுபவ மரபுச் செல்வமாக ஏற்றுச் செயற்படுத்தி வந்துள்ளனர்.

மண் சுவர்க் குடிசையில் வாழ்ந்தவன் நாகரிகப்படி நிலையில் செங்கற்களை அடுக்கிச் சுவரமைத்து வீடு கட்டியுள்ளான் என்பது,

“சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்” (பெரும்பாணாற்றுப்படை. 405)

(சுடுமண் = சுட்டமண், செங்கல்)

இட்டிகை நெடுஞ்சுவர்

(அகநானூறு. 167 : 13)

(இட்டிகை = செங்கல்)

எனவரும் செய்யுட் பகுதியாலும், தூண் வைத்துக் கட்டும் இல்லம் இருந்தமை பற்றி

“கவை துற்ற நாற்காற் பந்தர்ச் சிறும னை வாழ்க்கை” (புறநானூறு,பா. 29)

(கவைதுற்ற = பிரிவு தோன்ற)

எனவரும் செய்யுட் பகுதியாலும், புல்லாலும் வரகு வைக்கோலாலும் தென்னங் கீற்றாலும் வீட்டின் கூரை வேய்ந்த பாங்கினைப்,

“புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து” (புறநானூறு.பா.120)

“படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை” (அகநானூறு. பா. 87 ))

“பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்” (பெரும்பாணாற்றுப்படை. 152 : 153)

எனவரும் செய்யுட்பகுதியாலும் அறிந்து கொள்ளலாம். மிகப் பண்டைய காலத்திலேயே ஓவியம் போன்ற மனைகள் கட்டடக் கலை நேர்த்தியுடன் கட்டப்பட்டிருந்தன. இதனை

ஓவத்தன்ன இடனுடை வரைப்பின் (நற்றிணை, பா.182 )

ஓவத்தன்ன வினைபுனை நல்இல் (அகநானூறு, பா. 98 )

(ஓவம் = ஓவியம்)

எனவரும் செய்யுட் பகுதிகளால் தெரிந்து கொள்ளலாம். பெருமனைகள் கட்டிய காலத்தில், மக்கள் தம் வளத்துக்கும் வசதிக்கும் ஏற்ப வீட்டின் பல பக்கங்களிலும் படிகளுடன் கூடிய திண்ணைகளைக் கட்டி வாழ்ந்துள்ளனர்.

**அரண்மனைகள்**

படையாற்றலும் கொடையாற்றலும் மிக்க வேந்தர்கள் தம் நாட்டினைப் பாதுகாப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போர் நிமித்தம் பகைவர் நாட்டில் தன் படையுடன் தங்கியுள்ளான். அதே நேரத்தில் கோப்பெருந்தேவி மதுரை அரண்மனை உள் கோட்டையில் அவன் நினைவாகவே இருந்து வருகிறாள். இத்தகைய சூழலில் அந்த அரண்மனையின் கட்டுக்கோப்பினை வருணித்துக் காட்டுகிறார் கணக்காயர் மகனார் நக்கீரர். மேலும், அழகிய அரண்மனை மாடத்தில் தீட்டப்பெற்ற வேங்கைப் புலியின் ஓவியத்தைக் கண்டதும் கரிய பெண்யானை நடுக்க முறுகிறதாம்! இளநங்கையரும் கண்டு அச்சமுற்று நடுங்குகின்றனராம்! இதனைப் பரிபாடலில், எழில் மாடத்துக்

"சென்மன மாலுறுப்பச் சென்றெழின் மாடத்துக்
கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புறச்
செய்தொழில் கொள்ளாது மதிசெத்துச் சிதைதர" (பரி.பா.10)
எனவரும் பாடற் பகுதியால் அறியலாம்,

அரசர்க்கே தனிப்பட்ட முறையில் சொந்தமான சித்திரமாடங்களும் அக்காலத்தில் கட்டப்பட்டிருந்தன. அவற்றைப் பொது மக்களும் உத்திரவு பெற்ற ஓவியங்களைக் கண்டுகளிக்கக் கூடிய முறையில் வசதி இருந்தது.

**படைக்கலக் கொட்டில்**

சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில் அவர்கள் ஒற்றுமையுடன் உறவாடிய வாய்ப்பு மிகக் குறைவே. அவர்களுள் நாட்டை விரிவுபடுத்தும் எண்ணத்தில் போர்க்களம் புகுவதும், போரிட்டு வெற்றியோ தோல்வியோ அடைவதும் வரலாற்று ஏடுகளில் சொல்லப்பட்டு உள்ளன. போரிட, போர்க்குரிய வாள், வேல், வில், அம்பு முதலிய படைக்கருவிகளைத் தயாராக வைத்திருப்பர். இரும்பு செய் கொல்லர்க்குப் படைக்கருவிகள் செய்து தருவது அவர்களின் கடமையாக இருந்தது ; வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே (புறநானூறு, பா. 312) எனப் புறநானூறு கூறுகிறது. படைக்கருவிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் கட்டடமே 'படைக்கலக் கொட்டில்' ஆகும்.

வள்ளல் அதியமான் சிறந்த போர்த்திறம் மிக்க மன்னன். ஒரு காலத்தில் அமைதியை நாடிப் புலவர் ஔவையாரைத் தொண்டைமானிடம் தூது விட்டான்; தொண்டைமான் ஔவையாரிடம் தன் பெரிய படைக்கலக் கொட்டிலைக் காட்டிச் செருக்குடன் நின்றான். அவனது செருக்கையடக்கும் நோக்கத்தில் ஔவையார், இங்கே படைக்கருவிகள் மயில் தோகை அணியப்பட்டு மாலை சூட்டப்பட்டுத் திரண்ட காம்பும் அழகுபட அமைத்து நெய் பூசப் பெற்றுக் காவலுடன் உள்ளன ; ஆனால், அதியமான படைக்கலங்களோ பகைவரைக்குத்தி நுனி முரிந்து செப்பஞ் செய்யக் கொல்லன் உலைக்கூடத்தே கிடக்கின்றன. இதன் வழி அவன் வேல் கூர்மையானது எனக் குறிப்பிடுகிறார்.

"இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியன்நக ரவ்வே : அவ்வே,
பகைவர்க் குத்திக், கோடுநுதி சிதைந்து,
கொல்துறைக் குற்றில மாதோ ; என்றும்
உண் டாயின் பதம் கொடுத்து,
இல் லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல்எம் கோமான், வைந் நுதி வேலே" (புறநானூறு, பா. 95)

இங்குக் கூறப்பட்ட படைக்கலக் கொட்டிலும், கொல்லன் உலைக் கூடமும் கட்டடக் கலை நோக்கில் சிந்திக்கத்தகும்

**முடிவுரை**

பழந்தமிழர்கள் அழகான வீடுகளிலும், மாடமாளிகைகளிலும் வாழ்ந்ததற்கான குறிப்புகள் பல சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. மேலும் அவை எந்த அளவு கலைத்திறனோடு அமைக்ககப்படிருந்தன என்பதற்கான சான்றுகளும் உள்ளன. அதில் இல்லங்கள், மாடங்கள், அரண்மனைகள் போன்ற அமைப்புகள் சிறப்பாக இடம்பெற்றிருந்தமையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடியும்.

**பார்வை நூல்கள்**

1. பண்டைத் தமிழர் தொழில்கள், டாக்டர், வி.சி. சசிவல்லி, உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை-113
2. எட்டுத்தொகை - கலித்தொகை, குறுந்தொகை, புறநானூறு . நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,
3. பிள்ளை, கே.கே - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு (1975)
4. ஜோதிராணி, க.அ., - சங்க இலக்கியத்தில் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் நிலை,
5. சங்க இலக்கியம் - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை, பதிப்பு-2007
6. சங்க இலக்கியம் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு-2004
7. அகிலா சிவங்கா (தொகு.ஆ) - தமிழ் இலக்கியங்கள் காட்டும் தொழில்கள், ஜனகா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு -2011
8. கழகப் புலவர் குழு - கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1998